தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## <u>ஆணை நாள் 03.08.2026</u>

## <u>முன்னிலை</u>

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். CP 1407/SCIC/2026</u>**

திரு.அ.திருஞானசம்பந்தம் - புகார்தாரர்
எண்.18/36, அண்ணா தெரு
எருமைபட்டி அஞ்சல்
நாமக்கல் - 637 013
Phone: 8012745223.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
நாமக்கல் - 637 003.

## <u>ஆணை</u>

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **28.12.2025** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 29.01.2026 |
| 3. | மனுதாரரின் புகார் மனு | 31.01.2026 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 28/12/2025 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ பதிவுத் துறை, மாவட்டப் பதிவாளர் அலுவலகம், நாமக்கல் அவர்களுக்கு அனுப்பி, அதில் “ பார்வை - எனது மனு நாள் 28/11/2025 (2) தங்கள் அலுவலக கடிதம் ந.க.எண்.6998/ஆ5/2025 நாள் 04/12/2025 - தொடர்பாக - மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையின் நீதிப்பேராணை மனு எண்.WP (M.D) No.19918 062025, Dated 22-07-2025-ன்படி, பதிவுத்துறை சட்டப்பிரிவு 83-ன் கீழ் நிவாரணம் பெற வழி வகை உள்ளதா என அறிய உரிய தகவல் பெற இம்மனுவை சமர்ப்பிக்கிறேன்” எனக் கோரியுள்ளார்.

2. இன்றைய (03/08/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.அ.திருஞானசம்பந்தம் அவர்கள் ஆஜராகவில்லை. எனினும், 01/08/2026 தேதியிட்டு மின்னஞ்சல் வாயிலாக அனுப்பியுள்ள கடிதத்தில், தான் நீண்ட காலமாக நீரிழிவு மற்றும் இதய நோய் காரணமாக பாதிப்புக்குள்ளாகி சிகிச்சையில் இருந்துவருவதால், நீண்ட தூர பயணங்களை மேற்கொள்ள இயலாது என்பதால், ஆணையத்தின் நேரடி விசாரணையில் கலந்து கொள்ள இயலாது எனத் தெரிவித்துள்ளார். பொது அதிகார அமைப்பின் சார்பில், தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக திரு.ஜெ.இந்துக்குமார், சார்பதிவாளர் (நிருவாகம்), மாவட்டப் பதிவாளர் அலுவலகம், நாமக்கல் அவர்கள் ஆஜரானார். மனுதாரர், மாவட்டப் பதிவாளர், நாமக்கல் மாவட்டம் அவர்களிடம் 28/11/2025 தேதியிட்டு மனு அளித்து, பதிவுத் துறைச் சட்டம் பிரிவு 83-ன் கீழ் நிவாரணம் பெற வழி வகை உள்ளதா எனக் கோரியுள்ளார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர், 23/01/2026 தேதியிட்டு பதில் அளித்துள்ளார். பின்னர், மனுதாரர் புகார் மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் 01/08/2026 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பியுள்ள மின்னஞ்சலில் "**நான் பதிவுத் துறைச் சட்டம் பிரிவு 83-ன் கீழ் நிவாரணம் பெற வழி வகை உள்ளதா எனக் கோரி, அது தொடர்பான சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிப்பேராணை எண்.W.P.(MD) 19918 of 2025 dated 22-07-2025 இணைத்து அனுப்பியிருந்ததாகவும், ஆனால் தனக்கு பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், நாமக்கல் மாவட்டம் அவர்கள் அனுப்பிய பதில், தனது கோரிக்கைக்கு முழுமையாக தொடர்பில்லாததாக அமைந்துள்ளது** " எனக் குறிப்பிட்டுள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் அளிக்கப்பட்ட பதிலை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.

**3. பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர், நாமக்கல் மாவட்டம் அவர்கள் மனுதாரருக்கு, அவர், கோரியவாறு பதிவுத்துறை சட்டப்பிரிவு 83-ன் கீழ் நிவாரணம் பெறுவதற்கான வழி வகை ஏதேனும் உள்ளதா என்பதைக் குறிப்பிட்டு விரிவான பதிலை 31/08/2026-க்குள் விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினை ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மனுதாரர், புகார் மனு தாக்கல் செய்திருப்பினும், மனுதாரர் 01/08/2026 தேதியிட்டு அனுப்பிய மின்னஞ்சலில் மேற்கூறியவாறு தெரிவித்திருப்பதால், ஆணையம் மேற்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது. எனினும், மனுதாரருக்கு 29/01/2026 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலரால், மனுதாரருக்கு பதில் அளித்திருப்பதால், பொதுத் தகவல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க எவ்வித முகாந்திரமும் இல்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 1407/SCIC/2026</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
**நாமக்கல்** - 637 003.

**புகார்தாரர்**

திரு.அ.திருஞானசம்பந்தம்
எண்.18/36, அண்ணா தெரு
எருமைபட்டி அஞ்சல்
**நாமக்கல்** - 637 013
Phone: 8012745223.

RG/Sr.PC